1978 செப்டம்பர் 9]

திரு. ஏ. ராமலிங்கம்: இந்தக் கூட்டுறவு சங்கங்களில் கொடுக்கப்படும் காசோலையை மாற்றப் போகும்போது, பரிசுப் பத்திரங்களை வாங்கும்படி மத்திய கூட்டுறவு வங்கி வற்புறுத்தி வருவது அரசுக்குத் தெரியுமா? இப்படிப்பட்ட தவறுகள் ஏற்படாத வகையில் அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: இதுவரையில் அரசுக்கு இப்படிப்பட்ட தகவல் எதுவும் வரவில்லை. இப்படிப்பட்ட முறைகேடுகள் எங்காவது இருந்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அருள்கூர்ந்து அரசுக்குத் தெரிவிக்கும்படி பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நில அளவு குறித்த வரை படங்கள்

*வினா எண் 104—திரு. வ. மு. சுப்பிரமணியம்; மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நில உரிமையாளர்களுக்கு நில அளவு வரை படம் வழங்குவது குறித்துத் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. வ. மு. சுப்பிரமணியம்: பேரவைத் தலைவர் அவர்களே, 1974 ஆம் ஆண்டு விவசாயிகளிடமிருந்து இதற்காக பத்து ரூபாய் வசூலிக்கப்பட்டது. இதற்கான நில அளவு வரை படங்கள் நிலச் சொந்தக்காரர்களிடம் இல்லாததால் அடிக்கடி வரப்பு தகராறு, நிலத் தகராறு வருகிறது. இதை கிராம அதிகாரிகள் பயன்படுத்திக் கொண்டு விவசாயிகளைத் துன்புறுத்தி வருகிறார்கள். இதனால் அடிக்கடி சச்சரவுகள் நடக்கின்றன. கடைசியில் கொலைவரை வந்து முடிகின்ற நிலைமை ஏற்படுகிறது. ஆகவே, இந்தப் பிரச்னையில் அரசு கவனம் செலுத்தி வரை படங்கள் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வரைப்படத்தைப்பற்றிக் கேட்டிருக்கிறார்கள். இப்போது அடங்கலைப்பற்றியும், கூட்டுப் பட்டாவைப் பற்றியும் கேட்கிறார்கள் என்று நினைக்கிறேன். கூட்டுப்பட்டா என்றிருந்தால் அதைப்பற்றி அதிகாரிகளிடத்தில் முறையிட வேண்டியிருக்கிறது. இதைப்பற்றியும் அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

[1978 செப்டம்பர் 9

(திரு. சி. ஆறுமுகம் எழுந்தார்........)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போதுள்ள கேள்வி அவர்களுடைய தொகுதியைப்பற்றியது. நீங்கள் ஏன் எழுந்திருக்க வேண்டும் ?

திரு. சி. ஆறுமுகம்: எந்தக் கேள்வி வந்தாலும் அதைப்பற்றி கேட்பதற்கு உறுப்பினர்களுக்கு உரிமையிருக்கிறது. ஆகவே, நீங்கள் இப்படித் தீர்ப்புச் சொல்வது சரியல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து நான் சொல்வதை சற்றுக் கேளுங்கள், கேள்வி கேட்டிருக்கக்கூடிய தொகுதியைப்பற்றி உபகேள்விகள் இருக்க வேண்டும் என்று பிஸினஸ் அட்வைசரி கமிட்டியில் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. சி. ஆறுமுகம்: அப்படிச் செய்திருப்பது சரியல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப்பற்றி உங்கள் கட்சித் தலைவரிடம் கேளுங்கள்.

திரு. சோ. அழகர்சாமி: இது பொதுவான கேள்விதானே?

திரு. சி. ஆறுமுகம் : பாராளுமன்றத்திலே இந்தியாவிலுள்ள பிரச்னைகளை எல்லாம் கேட்கலாம் என்றிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து பேசாமல் உட்காருங்கள். பேசுவதற்கு அனுமதி கேட்டு, எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் பேசுங்கள். இப்போது பேசி முடிந்தாகி விட்டதா ; உட்காருங்கள்.

மோத்தக்கல் ஊராட்சியிலுள்ள புறம்போக்கு நிலங்கள்

*வினு எண் 105—திரு. கே. ஜே. சுப்பிரமணியம் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம், போளூர் தொகுதி, 132. மோத்தக்கல் ஊராட்சிப் பகுதியிலுள்ள சர்வே எண் 117/2-இல் உள்ள தீய புறம்போக்கு நிலத்தில் பட்டா எவ்வளவு பேருக்கு வழங்கப்பட்டது ?

(ஆ) ஏற்கெனவே அனுபவித்து வருபவர்களுக்கு தாமதமில்லாமல் பட்டா வழங்கப்படுமா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது வழங்கப்படும் ?